Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

அனுப்புநர்
திரு.பா.ரமேஷ்குமார்,B.E.,M.B.A.,
துணை இயக்குநர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்
குமரன் வணிக வளாகம்(முதல் தளம்
திருப்பூர்-641601
Email: tiruppur.rdd@gmail.com
Phone : 0421-2235500

பெறுநர்
நிர்வாகப் பொறியாளர்
திருப்பூர் கோட்டம்
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்
188, சக்தி நகர், 3 வது வீதி
போயம்பாளையம் பிரிவு
பெருமாநல்லூர் ரொடு
திருப்பூர்

ந.க.எண் : 2648/ 2020/திமா

நாள். 05.09.2020

ஐயா,

பொருள் : அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம்-தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்- திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்-திருப்பூர் மாவட்டம்-திருப்பூர் தெற்கு வட்டம்-பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம்-பெருந்தொழுவு கிராமம் - க.ச எண் 479/3pt -ல் 0.97.00 ஹெக்டேர் பரப்பு உள்ள இடத்தில் பிளாக் எண்.1,2,3 மற்றும் 4 என்ற 4 பிளாக்குகளில் தரைதளம் மற்றும் மூன்று தளங்களில் உத்தேச 192 அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் கட்ட தொழில் நுட்ப அனுமதி வழங்கியது-விபரம் தெரிவித்தல்-தொடர்பாக.

பார்வை:

1. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 4367/2019/TCP2 நாள். 06.11.2019
2. மனுதாரர் செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், திருப்பூர் கோட்டம், Lr.No.436/SCB/JA/Tpr Dvn/2020 நாள்.31.08.2020.
3. திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.14808/2019/ஆ1 நாள்.14.08.2020
4. அரசாணை எண்.79.வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை ந.வ.4(3). நாள்.04.05.2017
5. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.
6. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 8557/2019/ஜி.ஆர் நாள்.08.05.2019
7. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 12201/2017/Spl Cell. நாள்.28.09.2017.
8. அரசாணை எண்.166, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.29.11.2018 (Insisting TNRERA Registration).
9. கட்டண கேட்பு வரைவு நாள் 03.09.2020 (மனுதாரருக்கு முகவரியிட்டது)
10. மனுதாரர் கட்டணம் செலுத்தி கடிதம் பெறப்பட்ட நாள் 05.09.2020
11. திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக தொழில் நுட்ப அனுமதி எண். 45/ 2020 'அ' 'ஆ' 'இ' மற்றும் 'ஈ' வரை நாள்.05.09.2020

மேற்காணும் பொருள் தொடர்பாக பார்வை 11 ல் கண்ட இவ்வலுவலக கடிதத்தில் தொழில் நுட்ப அனுமதி வழங்கி அதனை தலைவர், பொருந்தொழுவு ஊராட்சி அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே இறுதி ஒப்புதல் தொடர்பாக தலைவர், பொருந்தொழுவு ஊராட்சி அவர்களை அணுகி பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

17/09/2020
EXECUTIVE ENGINEER
T.N.S.C.B, TIRUPPUR DIVISION

துணை இயக்குநர்(பொ)
திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர்

நகர் ஊரமைப்புத்துறை

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர் : திரு. பா. ரமேஷ்குமார், பி.இ.,எம்.பி.ஏ.,

ந.க.எண்.2648/2020/ திமா நாள் : 05.09.2020.

பொருள் : அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம்-தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்- திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்-திருப்பூர் மாவட்டம்-திருப்பூர் தெற்கு வட்டம்-பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம்-பெருந்தொழுவு கிராமம் - க.ச எண் 479/3pt -ல் 0.97.00 ஹெக்டேர் பரப்பு உள்ள இடத்தில் பிளாக் எண்.1,2,3 மற்றும் 4 என்ற 4 பிளாக்குகளில் தரைதளம் மற்றும் மூன்று தளங்களில் உத்தேச 192. அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் கட்ட தொழில் நுட்ப அனுமதி வழங்குதல்-தொடர்பாக

பார்வை :
1. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 4367/2019/TCP2 நாள். 06.11.2019
2. மனுதாரர் செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், திருப்பூர் கோட்டம், Lr.No.436/SCB/JA/Tpr Dvn/2020 நாள்.31.08.2020.
3. திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.14808/2019/ஆ1 நாள்.14.08.2020
4. அரசாணை எண்.79.வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை ந.வ.4(3). நாள்.04.05.2017
5. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.
6. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 8557/2019/ஜி.ஆர் நாள்.08.05.2019
7. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 12201/2017/Spl Cell. நாள்.28.09.2017.
8. அரசாணை எண்.166, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.29.11.2018 (Insisting TNRERA Registration).
9. கட்டண கேட்பு வரைவு நாள் 03.09.2020 (மனுதாரருக்கு முகவரியிட்டது)
10. மனுதாரர் கட்டணம் செலுத்தி கடிதம் பெறப்பட்ட நாள் 05.09.2020

உத்திரவு:

திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்-திருப்பூர் மாவட்டம்-திருப்பூர் தெற்கு வட்டம்-பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம்-பெருந்தொழுவு கிராமம் - க.ச எண் 479/3pt -ல் 0.97.00 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட மனையிடத்திற்கு "A to G" என எல்லையிடப்பட்டு அம்மனைக்கு **ம.வ./நஊ(தி.மா) எண்- 149/2020** என எண்ணிட்டு மனையிட ஒப்புதலும் அம்மனையில் அமையும் பிளாக் எண்.1,2,3 மற்றும் 4 என்ற 4 பிளாக்குகளில் தரைதளம் மற்றும் மூன்று தளங்களில் உத்தேச 192 அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் கொண்டதும் **7083.52 FSI** பரப்பளவுடன் கூடிய கட்டிட வரைபடங்களுக்கு **க.வ/நஊ(திமா) எண். 45/2020** என்ற எண்ணில் 05.09.2020 முதல் 04.09. 2025 வரையிலான 5 (ஐந்து) வருட காலத்திற்கு கீழ்கண்ட சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளின் கீழ் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது.

உத்தேச விபரம்

மனையின் மொத்த பரப்பு : 0.97.00 ஹெக்டேர்

Description	No.of Dwelling unit	Non FSI	FSI	Total Built up area
Block-1				
Ground Floor	16	-	589.90	589.90
First Floor	16	-	589.90	589.90
Second Floor	16	-	589.90	589.90
Third Floor	16	-	589.90	589.90
Head Room	-	14.45	-	14.45
Total	**64**	**14.45**	**2359.60**	**2374.05**

Scanned with CamScanner

Block-2&3				
Ground Floor	12	-	442.72	442.72
First Floor	12	-	442.72	442.72
Second Floor	12	-	442.72	442.72
Third Floor	12	-	442.72	442.72
Head Room	-	14.45	-	14.45
Area of each bloack	48	14.45	1770.88	1785.33
Total Area of Block 2&3	**96**	**28.90**	**3541.76**	**3570.66**
Block 4				
Ground Floor	8	-	295.54	295.54
First Floor	8	-	295.54	295.54
Second Floor	8	-	295.54	295.54
Third Floor	8	-	295.54	295.54
Head Room	-	14.45	-	14.45
Total	**32**	**14.45**	**1182.16**	**1196.61**
Grand Total	**192**	**57.80**	**7083.52**	**7141.32**
FSI			**7083.52 / 9700.00**	**0.730<2.0**
கட்டிட உயரம் - 12.4மீ				

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1) தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ள இட அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள வரைபடத்தில் வரிசை எண்.1 முதல் 4 வரை எல்லையிடப்பட்டுள்ள பூங்கா 975.52ச.மீ பொது உபயோக ஒதுக்கீடு திறவிடங்கள் மற்றும் அவற்றிற்கான அணுகுவழி ஆகியவற்றை தானமாக பத்திர பதிவு செய்து மனுதாரரால் சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். பத்திரம் நகல்கள் இவ்வலுவலகத்திற்கு ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

2) சாலைக்கான இடம் மற்றும் பொது ஒதுக்கீடு திறவிடத்தினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக்கு தானமாக பெற்றுக் கொண்டு அதன் விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கவேண்டும்.

3) சாலைக்கான இடம் மற்றும் பொது ஒதுக்கீடு திறவிடத்தினை நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்க வேண்டும்.

4) It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

5) Technical Clearence is issued in accordance with the provisions of the Town and country planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the building Rules under the Local bodies Act. Technical Clearence is issued subject to the condition that the Applicant /Developer and also the architects /Licensed surveyors and the structural Engineer Associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

Scanned with CamScanner

6) நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பெயரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம்,குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொதுஅதிகாரப்பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் மேலும் அதன் மேல்வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

7) மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்படப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்படவேண்டும்

8) The provisions in the G.O(MS)No.17,Housing and urban Development (ud4(3)) Department dated:05.02.2016 relating to installation and use of solar energy system should be followed.

9) பார்வை 7 மற்றும் 8-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை மற்றும் அரசணையின்படி- "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estte (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate project with the Real Estate Regulatory Authority."

10) பார்வை 6-ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி "This Order is passed subject to the outcome of the writ petition WP(MD) No.8948 of 2019" என நிபந்தனையிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. உத்தேச 192 குடியிருப்புகள் உபயோக கட்டுமானத்திற்கு solar Water Heating system அமைக்கப்பட வேண்டும்
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. கட்டிடத்தில் மாற்றங்கள ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி அனுமதி பெறப்பட வேண்டும்
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும் அரசாணை எண்.138. நகராட்சி நிர்வாகம் மற்றும் குழநீர் வழங்கல் துறை நாள்11.10.2002 ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியெறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும். உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர .வேண்டும்
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத் தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்

8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்

9. அரசாணை எண்.341-நகராட்சி நிர்வாகம் மற்றும் குழநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள் 3.11.2004 ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்

10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின் படி உத்தேச கட்டிடம் கட்டும் போது FLY ASH BRICKS &Materials கண்டிப்பாக பயன்படுத்தப்பட வேண்டும்

11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட வேண்டும்

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் அசல் நகலுடன் மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

13. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act) -ன்படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்படவேண்டும்.

14. மேலும் இந்த தொழில் நுட்ப அனுமதியானது பிரிவு நகர்ஊரமைப்புசட்டம் 1971 (சட்டம் 35-1972) ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.

15. பிரிவு 80, நகர்ஊரமைப்புசட்டம் 1971 (சட்டம் 35-1972) ன் படி எந்த நபராவது இந்த உத்தரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது பிரிவு 64(1) ன் கீழ் மறுக்கப்பட்டிருப்பின் உத்தரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர்ஊரமைப்பு இயக்குநர் அரசுக்கு மேல் முறையீடு செய்யலாம்.

16. துணை இயக்குநர்(பொ) திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களால் தொழில் நுட்ப அனுமதி அளித்த பிறகு

அ) தொழில் நுட்ப அனுமதி பெற தவறான விவரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ,

ஆ)சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ உறுப்பினர் செயலர், மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் தொழில் நுட்ப அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.

17. குளியலறை மற்றும் Wash basin கழிவுநீரை சுத்திகரித்து கழிப்பறைகளுக்கு பயன்படுத்தும் வகையில் சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்

18. The Applicant/developer and also the Regiestered Professionals shall ensure that developments shall be structurally sound and adequate safety measures ae taken during the process of construction.

19. கட்டிடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்தரார் மூலம் Wiring செய்யப்பட வேண்டும்

20. கட்டிடத்தில் நில அதிர்வை தாங்கும் முறைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

21. தொழில் நுட்ப அனுமதி செயலாணைக் கடிதம் மனுதாரருக்கு வழங்கும்படி கேட்டு கொள்ளப்படுகிறது.

22. மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின் கீழ் சம்பந்தப்பட்ட உள்ளரட்சியிடம் பெற்று கொள்ள வேண்டும்

23. வழங்கப்பட்ட தொழில் நுட்ப அனுமதிக்கு மற்றும் பயன்பாடுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டு அக்கட்டடிடத்திற்கு வரிவிதிக்கப்படின் அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே (தலைவர், பெருந்தொழுவு ஊராட்சி) பொறுப்பாகும் எனத் தெரிவித்து கொள்ளப்ப்படுகிறது.

24. இக்கட்டிடத்தில் கட்டப்படும் கட்டிடத்தின் ஸ்திரத்தன்மை (Stability) மற்றும் கட்டுமானத்தின் தரம் (Quality) ஆகியவை குறித்து மனுதாரர்/அபிவிருத்தியாளர்,கட்டிட நுட்ப வல்லுநர்/உரிமம் பெற்ற அளவர் மற்றும் கட்டுமானப் பொறியாளர் ஆகியோர் பொறுப்பேற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

25. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. மனுதாரரிடமிருந்து பார்வை 4-ல் கண்ட அரசாணையில் குறிப்பிட்டுள்ள விதி எண் 3- ன் படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும், விதி எண் 9-ன் படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன்மாற்ற கட்டணமாகவும் கீழ்கண்ட கணக்குத் தலைப்பில் அரசுக்கு வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் உரிமம் வழங்கப்பட வேண்டும்.

27

26. <u>கணக்குத் தலைப்பு</u>

0217	Urban Development
60	Other Urban Development schemes
800	Other Receipts.
AS	Receipts under Land use conversion charges (DPC: 0217-60-800-AS-0005)

27. உள்ளாட்சியால் மேற்படி கட்டுமானத்திற்கு உரிமம் வழங்கிய பின்னர், அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கு மறுதபாலில் ஒப்புகைசான்று அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொழில் நுட்ப அனுமதி வழங்கபட்ட முத்திரை இடப்பட்ட வரைபடங்கள் தொகுப்பு 2 எண்ணம் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

தலைவர், பெருந்தொழுவு ஊராட்சி, மேற்படி கட்டிட அனுமதி குறித்த உத்தரவினை மனுதாரருக்கு வழங்கும்படி கேட்டுகொள்ளப்படுகிறார்.

மனுதாரர் மேற்கொண்டு தலைவர், பெருந்தொழுவு ஊராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுகொள்ளப்படுகிறது.

துணை இயக்குநர்(பொ)
திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர்

<u>இணைப்பு</u>
(இணைப்பு முத்திரையிடப்பட்ட இரண்டு தொகுப்பு வரைபடங்கள்)

<u>பெறுநர்</u>

தலைவர்
பெருந்தொழுவு ஊராட்சி
திருப்பூர் தெற்கு வட்டம்
திருப்பூர் மாவட்டம்

(தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு)

<u>நகல்</u> : (உள்ளாட்சி மூலமாக)

நிர்வாகப் பொறியாளர்
திருப்பூர் கோட்டம்
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்
188, சக்தி நகர், 3 வது வீதி
போயம்பாளையம் பிரிவு
பெருமாநல்லூர் ரோடு
திருப்பூர்

17/09/2020
EXECUTIVE ENGINEER
T.N.S.C.B. TIRUPPUR D...

39

பெருந்தொழுவு ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு. தலைவர். V. ரவிச்சந்திரன் அவர்கள்

ப. மு. / மு. மு. எண். :- ந07/2020 - 2021 நாள் : 15/09/2020

பொருள் : கட்டிடங்கள் - பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம் - பெருந்தொழுவு ஊராட்சி புதிதாக கட்டிடம் / கூடுதல் குடியிருப்பு / தொழிற்சாலை / வணிகக் கட்டிடம் கட்ட அனுமதிக் கேட்டல் தொடர்பாக

பார்வை : திரு. / திருமதி. :- நிர்வாகப் பொறியாளர், திருப்பூர் கோட்டம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், திருப்பூர்.

விண்ணப்பம் நாள் : 05/09/2020

பொங்கலூர் ஒன்றியம் பெருந்தொழுவு ஊராட்சி திருப்பூர் மாவட்டம்

அனுமதி உத்திரவு :

பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம் பெருந்தொழுவு ஊராட்சிக்குட்பட்ட பெருந்தொழுவு க.ச. எண் 479/3B1 உள்ள இடத்தில் கூடுதல் கட்டிடம் / குடியிருப்பு கட்டிடம் / தொழிற்சாலை கட்டிடம் / வணிகக் கட்டிடம் கட்டிக்கொள்ள அனுமதி வேண்டி திரு. / திருமதி நிர்வாகப் பொறியாளர், திருப்பூர் கோட்டம். சமர்ப்பித்துள்ள வரைபடங்கள் மாவட்ட ஊராட்சி கட்டிட விதிகள் 1997 - ன் படி அங்கீகாரம் செய்யப்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இவ்வுத்திரவு தேதியிலிருந்து மூன்று / ஒருவருட காலத்திற்குள் புதிய / சேர்த்தும் / திருத்தியமைத்து கட்டிடம் கட்டிக்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள் :

1. புதிய கட்டிடம் கூடுதல் / கட்டிடம் கட்ட 15/09/2020 தேதி முதல் 14/09/2021 ம் தேதி முடிய 1 வருட காலத்திற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. அனுமதி காலம் முடிவடைந்தவுடன் மீண்டும் தற்போது செலுத்திய கட்டணத்தைப் போல் செலுத்தி அனுமதி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அப்படி புதுப்பித்தல் தவறி கட்டிடம் கட்டப்படுமானால் கோர்ட் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

2. கட்டிட வேலை முடிந்து 15 தினத்திற்குள் இவ்வலுவலகத்திற்கு எழுத்து மூலமான அறிக்கை கொடுக்கப்படவேண்டும்.

3. கட்டிட வேலை நடைபெறும்பொழுது கட்டிடம் கட்ட அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் எப்பொழுதும் அதிகாரிகளின் பார்வைக்கு வைத்திருக்கப்படவேண்டும்.

4. கட்டிடத்தின் படிக்கட்டுகள், சன்சேட் முதலியவைகள் ஊராட்சி நிலத்திலோ, ரோட்டிலோ கட்ட கூடாது.

5. கட்டிட வேலை அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி இருக்கவேண்டும். ஏதாவது மாற்றம் இருக்குமானால் அதற்கேற்ப வரைபடங்களும் திருத்தியமைத்து மீண்டும் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

6. கட்டிடத்திற்கு ஒரு பகுதியில் கண்டிப்பாக ஒரு கழிப்பிடம் கட்டவேண்டும்.

7. கட்டிடம் கட்டும் இடத்தில் ஜலதாரை இடம் ரோடு முதலிய பிரச்சனைகளை பொருத்து ஏற்படும் தகராறுகளை ஊராட்சி மன்றம் எவ்விதத்திலும் பொறுப்பு ஏற்காது. மேலும் இது சம்பந்தமாக தகராறுகளை விண்ணப்பதாரரே தன் சொந்த செலவினில் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

Scanned with CamScanner

41

41

8. கட்டிடம் கட்டத் தேவையான கல், செங்கல் போன்ற கட்டிட சாமான்கள் முதலியவைகளை ரோட்டில் போட்டு வைத்துக்கொண்டு போக்குவரத்து இடையூறு செய்யக்கூடாது. அவ்வாறு மனுதாரரால் இடையூறு ஏற்பட்டால் கட்டிட அனுமதி மறுக்கப்படுவதுடன் அதனால் ஏற்படும் செலவையும் விண்ணப்பதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

9. கட்டிடம் பொது சுகாதார முறைகளுக்கு ஏற்ற வகையில் கட்டப்பட வேண்டும். கழிப்பிடம் குளியல் அறை மேற்கு புறத்தில் கட்டப்பட வேண்டும்.

10. அரசினரால் அவ்வப்போது உத்திரவிடும் சகலவிதமான உத்திரவுகளுக்கும் மனுதாரர் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

11. இந்த கட்டிட அனுமதி தவறான முறையில் பெறப்பட்டதாக அல்லது தவறுதலுக்கு இடம் கொடுக்கக்கூடியதாகவோ இருக்கும் என நிர்வாக அதிகாரி கருதும் பட்சத்தில் அல்லது அவருக்குத் தோன்றும் உசிதமான காரணங்களைக் கொண்டும் இந்த கட்டிட அனுமதி ரத்து செய்வதற்கோ அல்லது மாற்றம் செய்வதற்கோ உட்பட்டதாகும்.

12. மேற்கூறிய விதிமுறைகளை மீறினால் அதனால் ஏற்படும் சகலவிதமான நடவடிக்கைகளுக்கும் விண்ணப்பதாரரே முழு பொறுப்பினை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஊராட்சி மன்றம் எந்த விதத்திலும் பொறுப்பில்லை.

13. அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் இத்துடன் அனுப்பப்படுகிறது.

14. கட்டிடப் பகுதியிலிருந்து வரும் கழிவறைக்கு முன் சொந்த செலவிலேயே அருகாமையில் உள்ள பொது ஜலதாரை வரை கட்டிக் கொள்ள வேண்டும்.

15. கதவுகள், ஜன்னல்கள் முறையே 6'3' 4'3' அளவுக்கு குறையக்கூடாது.

16. வரைபட அங்கீகாரம் 1997ம் வருடத்திய தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் தமிழ்நாடு ஊர்கள் மற்றும் நகரமைப்புச் சட்டம்.

17. மழை நீர் சேமிப்பு வடிகால் அமைத்தல் வேண்டும்.

18. கொடுக்கப்பட்ட தகவல்கள் தவறானதாக இருந்தாலோ பொது இடத்தில் ஆக்கிரமிப்பு இருந்தாலோ இவ்வனுமதி செல்லத்தக்கதல்ல.

இணைப்பு : அங்கீகரிக்கப்பட்ட வரைப்படம்

பெருந்தொழுவு கிராம ஊராட்சியின்
கோப்பு எண் 7/20-21 நாள் 15/9/20 ன்படி
நிபந்தனைகளுக்குட்பட்டு வீட்டுமனை /
~~தொழில்மனை / லே-அவுட்~~ / கட்டிடம்
அங்கீகாரம் செய்து இதன் மூலம்
உத்தரவு இடப்படுகிறது.

தலைவர் / செயல் அலுவலர்
பெருந்தொழுவு ஊராட்சி மன்றம்

R/ 15/09/20

பெறுநர் :
திரு திருமதி.

நிர்வாகப் பொறியாளர்
திருப்பூர் கோட்டம்.
தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்.
188, சக்திநகர், 3வது வீதி.
போயம்பாளையம் பிரிவு
பெருமாநல்லூர் ரோடு
திருப்பூர்.

17/09/2020
EXECUTIVE ENGINEER
T.N.S.C.B. TIRUPPUR DIVISION



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate